NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu, p4*
**Date:** 22 August 2018

# கை, கால், வாய்ப்புண் நோயைக் கண்டறியும் புதிய சோதனை

கை, கால், வாய்ப்புண் நோய் உடைய பிள்ளைகளை அடையாளம் காண உதவும் புதிய வழியை சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தை (என்யுஎஸ்) சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர். இதன்வழி அந்த நோய்க்கான அறிகுறிகள் தென்படுவதற்கு முன்னதாகவே உமிழ் நீரின் ஒருசில சொட்டுகளைக் கொண்டு அந்த நோய் இருப்பதை உறுதிசெய்துவிடலாம்.

இந்நோய்க்கான சோதனை சாதனத் தொகுப்பு (test kit) பாலர் பள்ளிகளிலும் குழந்தைப் பராமரிப்பு நிலையங்களிலும் எதிர்காலத்தில் கிடைக்கக்கூடும்.

இதனால் இந்நோய் ஆரம்ப கட்டத்திலேயே கண்டறியப்படுவதால் நோய் பரவலைத் தடுக்க முடியும். ஆனால், இந்தச் சோதனை சாதனத் தொகுப்புகள் முதலில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பிள்ளைகளிடம் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

கடந்த மாதம் 29ஆம் தேதிக்கும் இம்மாதம் 4ஆம் தேதிக்கும் இடையில் கை, கால், வாய்ப்புண் நோய் தொடர்பில் 1,249 சம்பவங்கள் பதிவாகின.

இவ்வாண்டு இதுவரை அத்தகைய சுமார் 28,000 சம்பவங்கள் நிகழ்ந்தன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.